**தலைப்பு 306 – இலங்கை புகையிரதத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை புகையிரத திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை புகையிரத திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) இலங்கை புகையிரத திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

கீழேயுள்ள அவதானிப்பு செய்யப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்வைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றின் படி 2018 ஜனவரி 01 திகதிக்கு நிலுவை வருமானம் ரூபா 2,002,772,608 ஆக இருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு மிகுதி ரூபா 1,525,269,826 ஆகும். அதன் படி மீளாய்வாண்டில் ஆரம்ப நிலுவை வருமான மிகுதியில் ரூபா 477,502,782 க்கு ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சென்ற ஆண்டின் இறுதி மிகுதியை மீளாய்வாண்டின் ஆரம்ப மிகுதியாக முன்னுக்கு கொண்டுவர வேண்டியதுடன் பிறகு ஜேனல் குறிப்புக்கள் மூலம் பிழை திருத்தம் செய்யப்படல் வேண்டியமை. | சிறு தாமதம் தகாரணமாக 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிலுவையை பதிய முடியாமற் போயிற்று ஆகவே அது 2018 ஜனவரி 01 ஆந் திகதிக்கான மிகுதியாக திருத்தப்பட்டு 2018 ஆம் வருட அறிக்கையுடன் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலுவை பெறுமதியாகிய ரூபா 477,502,782 இப்போதைக்கும் நிலுவையாக உள்ளது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

கீழேயுள்ள அவதானிப்பு செய்யப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதி திறைசேரியினால் புகையிரத திணைக்களத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக வெளியிடப்பட்ட அறிக்கை மற்றும் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் பற்றிய அறிக்கைகிடையே ரூபா 41,888 மில்லியன் ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டுக்கான காரணங்களைக் கண்டு பிடித்து சொத்துக்களை பிழையின்றி கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | முன்னால் இவ் வேறுபாடுகளைப் பற்றி கண்டறிந்து திறைசேரி கணக்குகளுடன் ஒப்பிட்டு திருத்துவதற்கான ஆலோசனைகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு வழங்கப்படும். |

### 1.6.3 முற்பணக் கணக்கு நிலுவை

கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) இப்போதைக்கு கடமையில் இல்லாத உத்தியோகத்தர் களிடமிருந்து மீளாய்வு வருடம் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அறவிடவுள்ள கடன் நிலுவை ரூபா 103.27 மில்லியன் ஆகும். அதில் 05 வருடங்கள் கடந்து உள்ள கடன் நிலுவை ரூபா 44.44 மில்லியன் ஆக இருந்ததுடன் இரண்டு வருடத்திற்கும் ஐந்து வருடத்திற்கும் இடையே அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா மில்லியன் 15.94 ஆகும். | தாபனக் கோவை XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இறந்து போன உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய சம்பளக் கோவைகள் தயார் செய்யப்பட்டு வருகின்ற படியால் அக் கோவைகள் செய்து முடித்த பிறகு அந்த கடன் நிலுவைகள் ஒன்று திரட்டப்பட்ட ஒய்வுதியத்திலிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுதல். |
| (ஆ) சொத்துக் கொள்வனவுக்கான கடன் பெற்றுக்கொண்டுள்ள கடமையில் இல்லாத 91 உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு 01 வருடம் முதற் கொண்டு 05 வருடங்கள் வரையிலான வீச்சில் அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை ரூபா 4.911 மில்லியன் ஆவதுடன் 05 வருடங்கள் கடந்த கடன் நிலுவை ரூபா 4.17 மில்லியன் ஆகும். | சொத்துக் கடனுக்காக பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கும் பிணையை அல்லது அட்டோனி அதிகாரத்தை உபயோகித்து நிலுவைக் கடன்களை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அறவிடமுடியாத அளவு இருப்பின் பிணையாளியிடம் இருந்து அல்லது அட்டோனி அதிகாரத்தை உபயோகித்து நிலுவைக் கடன் மிகுதியை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய சொத்துக்கடன்களுக்காக அட்டோனி அதிகாரத்தை உபயோகித்து நிலுவைக் கடன் மிகுதியை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கும் படி சம்பந்தப்பட்ட உப திணைக்கள தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பிரித்துக் காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 102 – 109 | 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி S-11 – 902 இலக்க பவர் செட் வண்டியின் எஞ்சின் வேறொரு புகையிரதத்துடன் மோதி ஏற்பட்ட விபத்தில் ரூபா 48 மில்லியனுக்கான இழப்பு சம்பந்தமாக பொறுப்பானவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிககை எடுக்கப்படவில்லை மேலும் அந்த புகையிரத எஞ்சினை பாவனையிலிருந்து ஒதுக்குவதற்கான திறைசேரி அனுமதியை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ரூபா 162 மில்லியன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த M9-868 இலக்க எஞ்சின் 2009 ஏப்ரல் 29 ஆந் திகதி தீப்பற்றி எரித்து சேதமடைந்து இருந்த போதிலும் சேதம் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்துக்கு அமைவாக செய்யப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட பொறுப்பானவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சம்பந்தப்பட்ட அறிக்கையை கூடிய விரைவில் பெற்றுக் கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 772 | 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதியின் போது நாறு ஓயா நிரந்தர பாதை பரிசோதகர் காரியாலயத்திற்கு சொந்தமான பாவனைக்கு உதவாத 1145 தண்டவாளங்கள் இருந்ததுடன் அது சம்பந்தமாக | உரிய முறையில் ஒதுக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | நிதிப்பிரமாணத்திற்கு அமைவாக பாவனையிலிருந்து ஒதுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | அரச நிதி பணிப்பாளர் தலைமை அதிபதியின் 2016 ஏப்ரலில் 25 ஆந் திகதிய PED/RED/07/FR/GEN ஆம் இலக்க கடிதம். | அரசுக்கு சொந்தமான சொத்து மூலமாக ஈடுபடப்படும் வருமானம் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக மவுன்ட்மேரி விளையாட்டரங்கை மற்றும் சமூக நிலையங்களை வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் 2012 முதல் 2017 வரை அறவிடப்பட்ட ரூபா 10,308,238 பணத்தை அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்படாது பல வித விழாக்களுக்காக சுமக்கப்பட்டிருந்தது. | அரசுக்கு மேற்படி சொந்தமான சொத்துக் களிலிருந்து ஈட்டப்படும் வருமானம் அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புகையிரதம் மூலம் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு 32 நிறுவனங்களிலிருந்து ரூபா 79.13 மில்லியன் பணம் அறவிடப்பட வேண்டி இருப்பதுடன் அதில் நூற்றுக்கு 25 வீதம் 18 வருடங்களுக்கும் மேலாக இருப்பதுடன் நூற்றுக்கு 03 04 வருடங்களுக்கும் மேலான மிகுதியாகும். | இப்போதைக்கு நிலுவைக் கடன் மிகுதியாக ரூபா 40.73 மில்லியன் அறவிடப் படுவதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி இருப்பதுடன் அறவிட முடியாத கடன் மிகுதி சம்பந்தமாக திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் செயல்பட வேண்டியமை. | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிலுவைப் பணமான ரூபா 79,138,305 பணத்தில் ரூபா 17,525,671 ஆனது 2019 ஆம் வருடம் அறவிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | சியேம் சிட்டி சிமென்ட் (இலங்கை) கொம்பனிக்கு | மேலும் அறவிடப்பட உள்ள பணத்தை தராது | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு சியேம் சிட்டி இலங்கை கொம்பனியிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | போக்குவரத்து சேவை வழங்கியமைக்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ரூபா 26,664,988 அறவிடப்பட்டிருந்தது. 2015 மற்றும் அதற்கு முந்திய வருடங்கள் தொடர்பிலும் ரூபா 12,757,500 நிலுவையாக இருந்ததுடன் 2019 ஆம் வருடத்தில் அதில் ரூபா 11,168,472 மீட்கப்பட்டிருந்தது. | இருப்பதற்கான காரணத்தை தேடி அறிந்து அந்த பணத்தை அறவிடுவதற்கான துரித நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா 26,664,988 பணத்தில் ரூபா 23,216,303 ஆனது 2019 ஏப்ரல் ஆகும் போது மீட்கப்பட்டிருந்தமை. |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதிக்கு புகையிரத ஆணைச்சீட்டுக்கான நிலுவை வருமானம் ரூபா 1,190,239,418 ஆக இருந்தது. அவ்வறவிடப்பட வேண்டிய பணத்தில் நூற்றுக்கு 38 மே 05 வருடங்களுக்கு மேலான நிலுவைக் கடனாக இருப்பதுடன் அந்த நிலுவை அறவிட்டுக் கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் இயலாது போய் இருந்ததுடன் அந்த மிகுதியினுள் 20 வருடத்திற்கும் மேல் பழைய ரூபா 769,194 க்கான மிகுதியொன்றும் இருந்தது. நிலுவை வருமானம் சம்பந்தமாக தனியான மிகுதி வகைப்படுத்தலும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிலுவை ஆணைச்சீட்டு வருமானத்தை அறவிடப்பட வேண்டிய அரச நிறுவனங்களுடன் கலந்துரையாடி துரிதமாக பழைய நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் 1985 ஆம் வருடத்திற்கு முன்னதாகவே இருந்து வரும் நிலுவையை உறுதிப்படுத்து வதற்கான நிலுவை மிகுதி பட்டியலொன்று நடாத்தப் படாமைக்கான காரணத்தை திறைசேரிக்கு நியாயப்படுத்தப்பட்டு தீர்வொன்று பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவை. | உத்தியோகத்தர் சேவை புரியும் திணைக்களத்தினால் சம்பந்தப்பட்ட பற்றுச் சீட்டை செலுத்தாமையினால் சலுகைக் கடனின் கீழ் பெற்றுக் கொள்ளப்படும் ஆணைச்சீட்டுக் கடன் சலுகையை இடை நிறுத்தப்பட்டது இது வரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிகழ்த்தப்படவில்லை. ரூபா 769,194 ஆன நிலுவைப் பணம் எவ்வெந்த நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிவை என்பதை உறுதிப்படுத்த முடியாமையினால் அந்த மிகுதியினை ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்வதற்காக அரச கணக்கீட்டு திணைக்களத்தின் அங்கீகாரத்தை கோரப்பட்டும் அதற்கான மிகுதி பட்டியலொன்று முன்வைக்கும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆரம்ப மதிப்பீட்டிலிருந்து ஒதுக்கீட்டு ஏற்பாடுகள் செய்து கொள்ளப்படாதிருந்த போதிலும் செலவின விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 மாற்றியதன் மூலம் ரூபா 05 மில்லியன் க்கான ஒதுக்கீட்டை மாற்றிக்கொள்ளப்பட்டும் அக் கருமத்தை செய்து முடிப்பதற்காக நிர்மாணப் பிரிவில் ஊழியர் இல்லாமைக்கான காரணம் காட்டப்பட்டு மொத்த ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது. | ஒதுக்கீட்டை மாற்றுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட காரியத்தை செய்து முடிப்பதற்கு தேவையான வளங்கள் உள்ளனவா என்பதைப் பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டியமை. | சம்பந்தப்பட்ட கருமத்தை செய்து முடிப்பதற்கு நிர்மாணப்பிரிவில் ஊழியர்கள் இல்லாது இருந்ததுடன் வெளியாரிடம் ஒப்படைத்து அந்த கருமங்களை செய்து முடிப்பதற்கு இயலாது போனமையினால் அவ்வாறு சேமிப்புக்கள் தேங்கியமை. |
| (ஆ) 2 செலவின விடயங்களுக்காக குறை நிரப்பு மதிப்பீட்டை கொண்டு ஒன்று சேர்ந்து ரூபா மில்லியன் 850 ஒதுக்கிக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதில் நூற்றுக்கு 50 க்கு மேல் சேமிப்பில் இருந்தது. | குறை நிரப்பு மதிப்பீட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப் படும் மேலதிக ஒதுக்கீடுகளில் ஆகக் கூடிய உபயோகம் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | செலவீனங்களை கணக்குகளில் பதியும் நோக்குடன் குறை நிரப்பு மதிப்பீட்டிலிருந்து ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் வருடம் முடிவதற்கு முன் செலவீனங்களுக்கான சான்றிதழ் கிடைக்காமையினால் செலவீனங்களை கணக்கேடுகளில் பதிவு செய்வதற்கு இயலாது போனமையால் ஒதுக்கீடு சேமிக்கப்பட்டமை. |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் இணக்கங்கள் ஏற்படுத்திக் கொள்ளல்**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரலில் 27 ஆந் திகதிய 255/2017 இலக்க அரச கணக்கீட்டு சுற்றறிக்கையின் 2 (ஆ) பந்தியின் விலகி மீளாய்வாண்டில் பொறுப்புக்களுக்கான 04 உருப்படிகள் சம்பந்தமாக வருடாந்த வரவு செலவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக் கமைவாக செயல்பட வேண்டியமை. | வித விதமான உதிரிப்பாக வகைகளை பாரிய அளவில் கொள்வனவு செய்வதற்கு நேர்ந்தமை மற்றும் களஞ்சிய முற்பண கணக்கு மூலமாக கொள்வனவு செய்யப்பட்டு அந்த பெறுகை சம்பந்தமான தகுதி சான்றிதழ் கிடைக்கப் |

| | |
|---|---|
| எல்லையை மீறி ரூபா 707.25 மில்லியனுக்கு ஆன தொடர்புகள் மற்றம் பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. | பெற்று அவைகளை நிவர்த்தி செய்வதற்காக குறிப்பிடத்தக்க காலம் கழிதல் போன்ற காரணிகளால் பொறுப்புக்களால் மற்றும் தொடர்புக்கள் அதிகரிப்பதற்கு காரணமாகும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கும் பணியும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயணிகள் மற்றும் பொருட்களை பாதுகாப்பான நம்பிக்கை மிகு மற்றும் உரிய நேரத்தில் பயணிக்கும் சிக்கனமான செயற்திறன் மிக்க போக்குவரத்து சேவையை வழங்குவது முக்கிய பணியாக இருந்த போதிலும் மீளாய்வு ஆண்டில் பயணிகள் புகையிரத சேவையில் 69,044 தாமதங்களும் பொருட்களுக்கான சேவையில் 5,810 தாமதங்களும் நேர்ந்துள்ளன. | திணைக்களத்தின் பொறுப்புக்களை நன்கு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இஞ்சின் இயந்திரங்களின் பற்றாக்குறை அவைகளின் கோளாறு போதிய அளவிலான பொருட் தொகை இல்லாமை மற்றும் காலநிலை பருவ நிலை போன்ற புகையிரத திணைக்களத்தினால் கட்டுப்படுத்த இயலாத காரணிகளால் திட்டமிடப்பட்ட புகையிரதங்களை போக்குவரத்தில் சேர்ப்பதற்கு இயலாது போயிருந்தமை. |

### 3.2 எதிர்பார்த்த விளைவு மட்டத்தினை எட்டாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 200 பாதை பாதுகாப்பு முறைமைகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கைக்கு அமைவாக 2017 ஜனவரி 27 ஆந் திகதியாகும் போது 200 பாதை பாதுகாப்பு முறைமைகளை முடித்து ஒப்படைக்க வேண்டி இருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முடிக்கப்பட்டிருந்த பாதை பாதுகாப்பு முறைமைகளின் எண்ணிக்கை 85 ஆகும். | ஒப்பந்தம் தாமதமாவதற்கான காரணத்தை ஆராய்ந்து அந்த காரியம் முடிப்பதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப கணிப்பீட்டு குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளமை. |

## 3.3 எதிர்பார்த்த பயனினை (Out come) பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான 14,000 ஏக்கர் நிலத்தில் சுமார் 7000 ஏக்கர் வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருப்பது சம்பந்தமாக பராமரிக்கப்படும் 7,245 கோவைகளில் சுமார் 1965 கோவைகள் செயல்படாது இருப்பது அவதானிக்கப்பட்டது. கோவைகளை கணனி மயப்படுத்தி நாளது வரை செய்வதற்கு ரூபா 900,000 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை கணனி மயப்படுத்தும் செயற்பாடு நாளது வரையாக நடாத்தப்பட்டிருக்கவிலலை. | சேவை பெற்றுக் கொள்வதற்கான இணக்கப்பாட்டு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள படி செயல் பட வேண்டியமை. | ICTA நிறுவனத்துடன் செய்து கொண்ட காரியமாகையினால் அந் நிறுவனத்தால் மூன்றாம் தரப்பான வெளி நிறுவனம் ஒன்றுக்கு கொடுப்பனவை வழங்குமாறு செய்த கோரிக்கையின் படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாமையினால் இக் காரியத்தை தொடர்ந்து செய்ய முடியாது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. |

## 3.4. திட்டங்களை முடிப்பதில் தாமதம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கண்டியிலிருந்து கெட்டம்பை புகையிரத குறுக்கு பாதை வரை இரட்டை புகையிரத பாதையை அமைக்கும் ஒப்பந்த உடன்படிக்கையின் படி 2016 ஒக்தோபர் 19 ஆந் திகதி நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து 2017 ஏப்ரலில் 07 ஆந் திகதி முடிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் 2019 மார்ச் ஆகியும் கூட அதன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டங்களை உரிய தினத்தில் முடிவித்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான சிரமம் மற்றும் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக எதிர்பார்க்கபட்ட காலத்தினுள் செயல் திட்ட வேலைகளை செய்து முடிப்பதற்கு இயலாது போனதுடன் இப் போதைக்கு அவ் வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது செயல் திட்டத்தின் வேலைகள் இறுதி கட்டத்தில் உள்ளது. |

**3.5 குறைவாக பாவனை செய்யப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2014 ஆம் வருடம் அவசர கொள்வனவாக ரூபா மில்லியன் 2,556 பெறுமதி வாய்ந்த புகையிரத குறுக்கப் பாதைகளுக்கான உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா மில்லியன் 6.31 பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் பாவனை செய்யப்படாது இப்போதைக்கும் சமிக்கை உப பிரிவில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன. அவ் உதிரிப்பாகங்களுக்காக பெற்றுக்கொடுக்கப் பட்டிருந்த 2 வருட உத்தரவாத காலமும் ஏற்கனவே முடிவடைந்து போய்விட்டது. | பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக ஏற்பாடுகளுக் கமைவாக நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பெற்றுக் கொள்ளப்பட்டிருந்து புகையிரத குறுக்குப் பாதைகளுக்கான பாதுகாப்பு முறைமைகளை பொருத்துவதற்கு பயன்படுத்தும் கபட்களை பெற்றுக் கொடுக்கப்படாமையினால் பாவனை செய்வது தாமதமடைந்த போதிலும் அந்த கபட்கள் 2018 ஆம் வருடம் இறுதிப் பகுதியில் பெற்றுக் கொள்ள முடிந்ததுடன் ஏற்கனவே 19 கபட்களும் பொருத்தப்பட்டு பாவனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அவை நன்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. |
| (ஆ) சமிக்கை மற்றும் தொலை தொடர்பு உப பிரிவுக்காக 2014 ஆம் வருடம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11.30 மில்லியன் பெறுமதி வாய்ந்த சமிக்கை உபகரணங்கள் தொழில் நுட்ப தகைமை இல்லாமையினால் 2015 பெப்ரவரி 15 ஆந் திகதியன்று அந்த உபகரணங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தும் இது வரையிலும் களஞ்சிய சாலையில் செயலற்று கிடக்கின்றன. | விநியோகித்தவர்களி டமிருந்து அறவிடப்பட வேண்டியதுடன் சம்பந்தப்பட்டவர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தற்கால நிலைமையை கவனத்திற் கொண்டு சமிக்கைகளை உரிய முறையில் மாற்றத்திற்குட்படுத்தி பாவனைக்கு எடுப்பதற்கான ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் இவ் வருடத்திற்குள் கூடிய விரைவில் பாவனையில் ஈடுபடுத்தும்படி ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு மாற்றம் செய்யப்படுவதற்கான செலவீனத்தை விநியோகித்தவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.6 சொத்துக்களுக்கான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 இலக்க சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி சம்பந்தப்பட்ட திகதிகளில் கொம்ப்டோலர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டுமாயினும் திணைக்களத்தின் நிதிசாரா சொத்துக்கள் சம்பந்தமாக அவ்வாறு செயல்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைகளில் கூறப்பட்டுள்ள ஆலோசனைப்படி செயல்பட வேண்டி உள்ளதுடன் அறிக்கைகளை அனுப்புவதில் ஏற்பட்ட தாமதம் பற்றி கவனித்துப் பார்க்க வேண்டியமை. | திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களில் ஒரு பகுதி ஏற்கனவே கொம்ப்டோலர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மிகுதி சொத்துக்கள் பற்றி எதிர்காலத்தில் கொம்ப்டோலர் நாயகத்திடம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை |

## 3.7 நட்டங்களும் இழப்புக்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 10 வருடங்களுக்கு குறைவான ரூபா 25,000 தாண்டப்படாத 180 சம்பளங்கள் தொடர்பான ரூபா 1.9 மில்லியன் க்கு உரிய இழப்புக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அந்த இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்ந்தும் மீளாய்வாண்டு நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தன. | இழப்புக்களையும் நட்டங்களையும் இயன்றளவு குறைத்துக் கொள்ளவும் நட்டங்கள் தொடர்பான நபர்களிடமிருந்து நட்டங்களை அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | இந்த நட்டங்கள் இழப்புக்கள் மீது மேற்கொண்டு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்படுவதாகவும் இந்த செயல்பாடுகள் சம்பந்தமான முன்னேற்றத்தை காலத்திற்கேற்ப அறியப்படுத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது. |
| (ஆ) கடந்த சுமார் 15 வருடக்கால பகுதியில் ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட ஆராய்வுக்குழு நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 பிரகாரம் அறிக்கைகளை முடிக்கப்படாமையினால் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் ரூபா | - மேற்படி - | இந்த ஆராய்வு நடவடிக்கை சம்பந்தமாக மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கி அதற்கான முன்னேற்றத்தை காலத்திற்கேற்ப அறியப்படுத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 25,000 க்கு மேற்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்களின் பெறுமதி ரூபா 253.74 மில்லியன் ஆகி இருந்தது. | | |
| (இ) | இரத்மலானை இயந்திர உப பிரிவில் உள்ள 39 தொழிற்சாலைக்காக 2017 ஆம் வருடம் SINGLE COPPER CABLE 240 mm 500 மீட்டர் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த கேபல்களில் ரூபா 1.55 மில்லியன் பெறுமதியான 2.15 மீட்டர்கேபல் 2017 ஆம் வருடம் களவாடப்பட்டிருந்ததுடன் இந்த இழப்பு நடந்த தினத்தில் இருந்து மூன்று மாதத்திற்குள்ளாக நிதிப்பிரமாணம் 104(4) பிரகாரம் பூரண அறிக்கையொன்று முன்வைக்கப் பட்டிருகவில்லை. | களவு சம்பந்தமாக பூரண ஆராய்வு நடத்தப்பட்டு பொறுப்பானவர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ஆராய்வதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | தலைமன்னார்த்துறை தளத்தில் இருந்து ரூபா 11.69 மில்லியன் பெறுமதி வாய்ந்த 50 தண்டவாளங்கள் காணாமற் போனதை இட்டு திணைக்களத்தினால் முறையான ஆராய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி நடந்திருந்ததுடன் அது சம்பந்தமாக முறையாக ஆராயப்பட்டு நட்டத்திற்கு பொறுப்பானவர்களை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | இது சம்பந்தமாக சட்டமா அதிபரின் ஆலோசனையை எதிர்பார்த்திருப்பதுடன் அதன் முன்னேற்றத்தை காலத்திற்கேற்ப அறியத்தரப்படும். |

**3.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **சமிக்கை அலவுகள் கொள்வனவு செய்தல்**<br>சமிக்கை மற்றும் தொலைத்தொடர்பு உப பிரிவிற்காக 2014 யூன் 30 ஆந் திகதி 35 சமிக்கை அலவுகள் ரூபா 11.36 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்தல் சம்பந்தமாக கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன. | | |
| (i) சமிக்கை உபகரணங்களை புகையிரத் திணைக்களத்திற்கு பொறுப்படைத்த நாள்முதல் 2 வருட காலம் வரை விநியோகஸ்தர் பொறுப்புக்குட்பட்டவராக இருந்தபோதிலும் அவை பாவனைக்கு உகந்ததல்லாதவை என சம்பந்தப்பட்ட பொறியியலாளர் அறியத் தந்திருந்தும் 2018 ஒக்டோபர் ஆகியும் சம்பந்தப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து தொழில்நுட்ப ரீதியாக உகந்த பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு அல்லது நட்டத்தை அறிவிடுவதற்கான நடவடிக்கை திணைக்களத்தினால் எடுக்கப்படவில்லை. | இக் கொள்வனவுடன் தொடர்புடைய தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் விநியோகஸ்தர் களிடமிருந்து இழப்பை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போதைய நடைமுறை நிலைமையை கவனத்திற் கொண்டு சமிக்கைகளை உரிய முறையில் மாற்றச் செய்யப்பட்டு பாவனையில் ஈடுபடுத்துவதற்கான ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதுடன் இவ்வாண்டுக்குள் விரைவில் பாவனையில் ஈடுபடுத்துவதற்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு மாற்றம் செய்வதற்கான செலவை விநியோகிஸ்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகளை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) சமிக்கை உபகரணங்களை விடுவித்துக் கொள்வதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் வங்கி வட்டியாக ரூபா 149,005 உம் கப்பல் கட்டணம் மற்றும் ஏனைய செலவினங்களாக ரூபா 676,943 உம்மாக மொத்தம் | | |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 825,948 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2014 ஆம் வருடம் சமிக்கை உப பிரிவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபர் 7.67 மில்லியன பெறுமதி வாய்ந்த BARRIER Machine (24VDC) ஒன்பதின் உத்தரவாத காலம் முடிவடைந்திருந்ததுடன் அவைகளை பாவனைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. மேலும் அப் பொருட்களை மீட்டுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக வங்கிக்கு மேலதிக வட்டியாக ரூபா 170,605 செலுத்த வேண்டி நேரிட்டதுடன் அதை பொறுப்பு வாய்ந்த தரப்பினர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தரவாத காலம் முடியும் வரை களஞ்சியப்படுத்தி வைத்திருந்ததில் அவைகளை பாவனைக்கு எடுக்கும் போது ஏற்படும் குறைபாட்டினை உண்டாக்கும் நட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் பொறுப்புக்கூற வேண்டியதுடன் தாமதமத்திற்கான மேலதிக வங்கி வட்டியையும் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியவை | சுமார் 09 (24VDC) இயந்திரங்கள் இப்போதைக்கு களஞ்சியசாலையில் இருப்பதுடன் அதில் 05 ERICSON வகையை சேர்ந்ததுடன் 04 Nima வகையை சேர்ந்ததாகும். இவை அவசர பராமரிப்பு வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. |
| (இ) | இரத்மலானை இயந்திர உப பிரிவில் உள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நீர்மானி பொருத்தப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2018 வருடம் முதல் 09 மாதத்தில் மாத்திரம் நீர் பாவனை அலகு 325,000 க்காக ரூபா 23.08 மில்லியன் திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | இரத்மலானை உபபிரிவில் கூடிய பெறுமதியில் நீர் பட்டியல் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இரத்மலானை உத்தியோகபூர்வ குடியிருப்பாளர் நீர் பட்டியல் செலுத்தாமை மற்றும் அனுமதியற்ற குடியிருப்பாளர் நீரை பெற்றுக்கொள்ளல் நிலைமையை தடுப்பதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதுவரை நீர்மானி பொருத்தப்படாத மனைகள் குறித்து கட்டணம் அறவிடப்படுவதில் பிரச்சினைகள் எழுந்துள்ளதுடன் மிகுதி மனைகளுக்காகவும் கட்டம் கட்டமாக நீர் மானி பொருத்தும் பணிகள் நடந்து கொண்டிருப்பதால் முன்னால் இப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை நடைமுறையில் உள்ளது. |
| (ஈ) | இரத்தினபுரியில் உள்ள புகையிரத பங்களாவை சட்டரீதியான குத்தகை உடன்படிக்கையின்றி இரு உத்தியோகத்தர்களால் பாவனை செய்யப்பட்டிருப்பதுடன் அவர்களால் 1996 முதல் 2015 மே 31 ஆந் திகதி வரை | உரிய முறையில் ஆராயப்பட்டு சம்பந்தப்பட்ட நிலுவைப் பணத்தினை அறவிடப் படுவதற்கான நடவடிக்கைகள் | இச் சம்பவம் சம்பந்தமான துரித பதிலினை வழங்குமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறியத்தந்துள்ளமை |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட வேண்டிய நிலுவை குத்தகை பணமான ரூபா 2.53 மில்லியன் மற்றும் 2016 யூன் 01 திகதி தொடக்கம் 2017 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட வேண்டிய நிலுவைப்பணம் ரூபா 0.88 மில்லியன் சேர்த்து ரூபா 3.41 மில்லியன் பணத்தை அறவிடுவதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படல் வேண்டும். | |
| (உ) | நானுஓயா புகையிரத நிலையத்தில் ரூபா் 1.8 மில்லியன செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட ஓய்வுகூடம் 2017 ஒக்தோபர் ஆகும் போது நிர்மாணப் பணிகள் முடிவடைந்திருந்த போதிலும் 2018 யூலை வரை திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது ஒரு வருட காலம் செயலற்று இருந்தது. 2018 ஆகஸ்ட் மாதம் மதிப்பீடு செய்யப்படாது மற்றும் குறிக்கோளிலிருந்து விலகி ரூபா 155,000 மாதாந்த வாடகைக்கு வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | கட்டடத்தை மதிப்பீடு செய்து மீண்டும் விலைமனு கோரப்பட்டு அல்லது குத்தகைக்கு விடுத்து திணைக்கள நிர்வாகத்தின் கீழ் நடாத்தப்பட வேண்டியமை. | பகிரங்க விலை மனு கோரப்பட்டதனால் அரச மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்படாமை. |
| (ஊ) | கொழும்பு கோட்டையிலிருந்து இரத்மலானை வரையில் உள்ள திணைக்களத்திற்கு சொந்தமான காணிகள் 2009 சனவரி மாதம் முதல் குத்தகை உடன்படிக்கைகளை புதுப்பிக்கப்படாது பாவனை செய்யப்பட்டமை குறித்து கீழேயுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன. | | |
| (i) | B/1987 இலக்க உடன்படிக்கை மூலம் புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான 14.78 பர்சஸ் காணியை தனிப்பட்ட வியாபாரி ஒருவருக்கு கடை ஒன்றிற்காக குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன் ஸ்தள பரிசோதனையின் போது வேறொருவர் வியாபாரத்தை நடாத்திக் கொண்டு செல்வது அவதானிக்கப்பட்டது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு | காணியை குத்தகைக்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய நேரடியாக புகையிரத திணைக்களத்தில் வைப்பில் இடுவதற்கான முறைமை யொன்றை | மிகுதிப் பணத்தை செலுத்தும் படி தெரிவித்திருந்த போதிலும், இதுவரை கொடுப்பனவு செய்யாது இருக்கின்றமையால் நிலுவைக் குத்தகை பணத்தை அறவிடுவதற்கும் காப்புறுதியை சுவீகரித்துக் |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணமான ரூபா 2,548,813 இதுவரையில் அறவிடப்பட்டிருக்காததுடன் 2018 ஆம் வருடத்திற்கான குத்தகைப் பணம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்க வேண்டியதுடன் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது அக்காணியை திரும்ப சுவீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | கொள்வதற்குமான ‘அ’ அறிவித்தல் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த பொறுப்பானவர்கள் சம்பந்தமாக மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இது தொடர்பான முன்னேற்றத்தை காலத்திற்கேற்ப அறியத்தரப்படும். |
| (ii) | 18 ஏக்கர் 01 றூட் 88 பர்சஸ் விசாலமான புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணியொன்றை 652 இலக்க குத்தகை உடன்படிக்கை மூலம் 1964 ஆம் வருடம் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த போதிலும், 1978 ஆம் வருடத்திற்கு பிறகு குத்தகைப் பணம் கொடுக்கப்படாது இருக்கவில்லை. 2017 திசெம்பர் மாதத்திற்கு நிலுவைக் குத்தகை அளவு ரூபா 14.03 மில்லியன் ஆக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்கான குத்தகை கணக்கிடப்படவில்லை. சம்பந்தப்பட்ட கால எல்லையினுள் குத்தகை உடன்படிக்கையை புதுப்பிக்கப்படாமை மற்றும் குத்தகை தளத்தை மீள சுவீகரிக்கப்படுவதாக குத்தகை எடுத்தவரிடம் தெரிவிக்கப்படாமையினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் இயலாது போயிருந்தது. | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளுக்கான சரியான தரவு முறைமை யொன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியமை மற்றும் நாளதுவரை செய்யப்பட வேண்டியமை | தகவல்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான சிரமம் காரணமாக சம்பந்தப்பட்ட குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு அல்லது குத்தகை தளத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், குறித்த காணியை இனங்காண்பதற்கான வரைபடம் ஒன்று கண்டுபடிக்கப் பட்டுள்ளமை |
| (iii) | சினிமா செயற்பாடுகளுக்காக 1978 பெப்ரவரி மாதம் இரத்மலானை கொத்தலாவலபுரத்தில் உள்ள 01 றூட் 22.83 பர்சஸ் கொண்ட பொதுசன நிலையத்தை LA3345 இலக்க குத்தகை உடன்படிக்கை மூலமாக தனிப்பட்ட தரப்பினருக்கு | கவனமின்மை யினால் நேர்ந்த தவறாகையினால் குறிப்பிடப்பட்ட தரப்பினர் விடயத்தில் கூடுதல் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | பணிக்குழுவின் கவனக் குறைவினால் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதனால் அக் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தி குறித்த நடவடிக்கை எடுப்பதற்காக கணக்காய்வு |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. 2014 ஜனவரி 1 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டிய குத்தகை பணமான ரூபா 5.02 மில்லியன் அறவிடப்பட்டிருக்க வில்லை. இருந்த போதிலும் 2019 பெப்ரவரி மாதமாகியும் அந்த பொதுசன நிலையம் வியாபார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | | பரீட்சையொன்று நடாத்துவதற்கு தேவையான செயற்பாடு நடைபெறுகின்றது. அதன் பலாபலன் மற்றும் முன்னேற்றம் குறித்து காலத்திற்கேற்ப அறியத் தரப்படும். |
| (iv) | 1973 யூலை மாதம் LA29871 இலக்க குத்தகை உடன்படிக்கை மூலம் வியாபாரத்திற்கான கடைகளை நிர்மாணிப்பதற்கு தெஹிவலை கல்கிஸ்ஸை நகர சபைக்கு அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. எப்படியாயினும் 1997 யூலை மாதத்திற்கு பிறகு புகையிரத திணைக்களம் மற்றும் தெஹிவலை மாநகரசபைக்கு இடையில் எவ்வித உடன்படிக்கையும் கைசாத்திடப்படவில்லை. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது ரூபா 8.16 மில்லியன் குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 2018 ஆம் வருடத்திற்கான குத்தகையை கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | தற்காலத்திற்கேற்ற முறையில் கணிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு நிலுவைப் பணம் மற்றும் தாமதக் கட்டணம் துரிதமாக அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | LA29871 இலக்க குத்தகை உடன்படிக்கைப் படி குத்தகை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள தளத்திற்கான நிலுவை பணம் கணக்கிடப்பட்டிருப்பது 2004 ஆம் வருட கணிப்பு அறிக்கையை அடிப்படையாக கொண்டாகும். 2018 ஆம் வருடம் முதல் புது கணிப்பு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டு நிலுவை பணத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கும் படி சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இது சம்பந்தமான பலாபலன் மற்றும் முன்னேற்றத்தை காலத்திற்கேற்ப தெரிவிக்கப்படும். |
| (எ) | 2016 மே 02 ஆந் திகதி முதல் 2021 மே 01 ஆந் திகதி வரை வைஸ்ரோய் புகையிரதம் செலுத்துதலை தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த உடன்படிக்கைப் படி திருத்த வேலைகள் சம்பந்தமாக நிபந்தனைகள் உட்படுத்தப் பட்டிருக்காமையினால் திருத்த வேலைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 6.1 | ஒப்பந்த உடன் படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ளும் போது சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று உடன்படிக்கை தயாரிக்கப்படல் வேண்டியமை. | சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் செய்யப்பட வேண்டிய திருத்த வேலைகளுக்காக புகையிரத திணைக்களத்துக்கு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 9,788,540 ஆகும். அப் பணத்தை திறைசேரி செயலாளரின் அனுமதியுடன் |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் பணம் திணைக்களத்திற்கு செலவுப் பழுவாய் போய் இருந்தது. | | காலாண்டுக்கு தலா 05 இலட்சம் படி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2019 முதல் காலாண்டுக்குப் பிறகு மேலும் அறவிடப்படுவதற்கான மீதி ரூபா 6.788 மில்லியன் ஆகும். |
| (ஏ) | தகுதி சான்றிதழ் பெற்றுக்கொடுக்காத மற்றும் செலுத்தப்படாத வெளிநாட்டிலிருந்து ஆணையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 49.23 மில்லியன் பெறுமதி வாய்ந்த பொருட்கள் களஞ்சியத்தில் தேங்கிக்கிடப்பதுடன் அவைக்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கான தகுதி சான்றிதழ் பெற்றுக் கொடுப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை | சம்பந்தப்பட்ட கோவைகளுக்கான தகவல்கள் இல்லாமையினால் விடையளிப்பதில் பிரச்சினை உண்டு. அரச கணக்காய்வு பிரிவிலிருந்து அத்தகவல்களை பெற்றுக்கொண்டு துரிதமாய் விடை வழங்கும் படி சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. |

## 4. நிரந்தர அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்ளுதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஏதாவதொரு செயலின் பிழையற்ற செயலாற்றலை அளந்துகொள்வதற்கு சரியானதொரு தரவு அடிப்படை இருப்பது கட்டாய தேவையாக இருந்தபோதிலும் நிறுவனத்தினால் நிரந்தர அபிவிருத்தி இலக்கினை அடைவதனை அளந்து பார்ப்பதற்கு சரியானதுமான தரவு அடிப்படையொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்த்த குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கும் தேவையான இலக்கினை இனங்கண்டு கொள்வதற்கும் சரியான தரவு முறைமையொன்றை ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | தரவு அடிப்படையொன்றை ஏற்படுத்தி முன்னெடுத்து செல்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். அதன் முன்னேற்றத்தை காலத்திற்கேற்ப அறிவிப்பதற்கு ஆவண செய்யப்படும். |

## 5. நல்லாட்சி

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளக கணக்காய்வு பிரிவுக்கான அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழு எண்ணிக்கை 52 ஆக இருந்ததுடன் உண்மையான பணிக்குழுவின் எண்ணிக்கை 16 மாத்திரமாக இருந்தது. | உள்ளக நிருவாகத்தை வலுவூட்டுவதற்கு கணக்காய்வு பணிக்குழுவின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | பணிக்குழுவின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) புகையிரத திணைக்களத்தினால் கணக்காய்வுக்காக முன்வைக்கப்பட்ட பணிக்குழு தரவுகளின் படி 2018 ஆம் வருட சிரேஷ்ட மட்டத்தின் பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் நூற்றுக்கு 48 ஆகும். | திணைக்கள மேல் மட்ட முகாமைத்துவத்தில் அதிகளவிலான வெற்றிடங்கள் நிரப்பாது இருப்பது செயலாற்று நடவடிக்கை மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அதிகப்படியான சிரேஷ்ட மட்ட பதவிகள் நாடாளாவிய சேவைக்கு உட்படுவதுடன் அப்பதவிகளில் iii ஆம் தர வெற்றிடங்கள் நிரப்பபட்டுள்ளதுடன் i ஆம் ii ஆம் தர வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு வருகின்றன. |
| (ஆ) மேலதிக பொது முகாமையாளர் (நடவடிக்கை) போக்குவரத்து அலுவலகர் மற்றும் உதவி களஞ்சிய அலுவலகர் ஆகிய 10 பதவிகளின் வேலையை ஈடுசெய்வதற்கு 48 உத்தியோகத்தர்கள் நிமியக்கப்பட்டிருந்தனர். | வேலைகளை ஈடு செய்யும் அடிப்படையிலான பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டியமை | இப்பதவிகளுக்கு நியமிப்பதற்கு தகைமையுள்ள உத்தியோகத்தர் இல்லாமையினால் பதவிகளை ஈடுசெய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1204 அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்கான சமயாசமய பணிக் குழுவொன்று அனுமதியின்றி சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழு புறம்பாக ஆட்சேர்ப்புச் செய்யக்கூடாது. | இந்த சமயாசமய ஊழியர்களை நிரந்தரமாக சேர்த்துக் கொள்வதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றமை. |
| (ஈ) | திணைக்களத்தின் ஷன்டின் சாரதி, இன்ஜின் சாரதி, உதவி சாரதி, புகையிரத காப்பாளர், புகையிரத ஸ்தான அதிபரி, மற்றும் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவம் ஆகிய சேவைகளின் வெற்றிடங்களுக்காக நிரந்தர ஆட்சேர்ப்பு செய்யாமல் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற 405 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | தற்போதைய பிரச்சினைகளுக்கு துரி தீர்வு கண்டு புதிய ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | புகையிரத உதவி சாரதி ஷன்டின் சாரதி போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது புகையிரத சங்கங்களின் எதிர்ப்பு தொழிற் தகைமை திருத்தங்கள் செய்ய வேண்டிய ஏற்படுதல் போன்ற பற்பல பிரச்சினைகளால் ஆட்சேர்ப்பு செய்யமுடியாது உள்ளதினால் சேவையை செவ்வனே நடாத்தி செல்வதற்கு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தி உள்ளமை. |
| (உ) | மூன்றாம் மட்டத்திலான பதவிகள் 431 இல் 189 உம், இரண்டாம் மட்டத்திலான பதவிகள் 10,958 இல் 1940 உம் ஆரம்ப மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 8,601 இல் 2973 உம் வகையிலான வெற்றிடங்கள் இருந்தன. இதன்படி திணைக்களத்திலுள்ள மொத்த எண்ணிக்கை வெற்றிடங்களில் 5421 இல் 5102 புகையிரத செலுத்தலுக்கான நேரடி தாக்கமுள்ள பதவிகளுடன் தோடர்புள்ளதால் அது விகிதாசாரப்படி நூற்றுக்கு 94 ஆகும். | புகையிரத சேவையை வினைத்திறன்படுத்தும் முகமாக இந்த கட்டாய பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | சேவகர் தேவையினை குறிப்பிட்டு முகமைத்துவ பிரிவின் அங்கீகாரத்துக்கு முன்வைக்கப்பட்டாலும் சமூகமாக பிரதிபலிப்பை பெற்றுத்தரப்படாமை. |